<u>பத்திரிக்கைச் செய்தி</u>

புத்தாண்டை முன்னிட்டு அரசு அலுவலங்களில் வெகுமதி பெறுவதாக கிடைத்த தகவலை அடுத்து ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையால் 28.12.2018 அன்று வெவ்வேறு இடங்களில் திடீர் சோதனை செய்யப்பட்டது.

சென்னை, இராயபுரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்களுடன் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சிறப்பு புலனாய்வுக் குழு பிரிவு, இணைந்து 28.12.2018 மாலை 6 மணிக்கு நடத்தப்பட்ட திடீர் சோதனையில் இராயபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.74,330/- கைப்பற்றப்பட்டது.

திருவண்ணமலை மாவட்டம் சார் பதிவாளர்-2 அலுவலகத்தில் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்களுடன் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணமலை மாவட்ட குழு இணைந்து 28.12.2018 அன்று நடத்தப்பட்ட திடீர் சோதனையில் திருவண்ணாமலை மாவட்டம் சார்பதிவாளர்-2 அலுவலகத்தில் கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.1,83,373/- கைப்பற்றப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி மதுவிலக்கு அமலர்க்கப்பிரிவு காவல் ஆய்வாளர் திரு.நீலகண்டன் அவர்க்ள் சட்ட விரோதமாக பார் நடத்துபவர்களிடமிருந்து பணம் வசூல் செய்வதாக கிடைத்த தகவலின் பேரில் மாவட்ட ஆய்வு குழு அலுவலக குழுவினர்களுடன், புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு இணைந்து திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின்போது காவல் ஆய்வாளர் திரு.நீலகண்டனிடமிருந்து கணக்கில் வராத ரூ.1,17,060/-ம், அவரது வாகன ஓட்டுநர் திரு.சுரேஷ், முதல் நிலைக்காவலர் 113, என்பவரிடமிருந்து கணக்கில் வராத ரூ.8,590/-ம் ஆக மொத்தம் ரூ.1,25,650/- கைப்பற்றப்பட்டது.

மேலும் கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவில் மனுதாரர் திரு.எம்.கோவிந்தராஜ் அவர்கள் கிருஷ்ணகிரி கட்டிநாயனப்பள்ளி கிராமத்தில் 25 வீட்டுமனைகளுக்கான மனைபிரிவிற்க்கு ஒப்புதல் பெறும் பொருட்டு தருமபுரி மண்டல நகர ஊரமைப்பு அலுவலகத்தில் விண்ணப்பித்ததாகவும், அதற்கு தருமபுரி மண்டல துணை இயக்குநர் திருமதி.ஜி.வசந்தி அவர்கள் ரூ.50,000/- கையூட்டாக கேட்டு அதில் முதல் தவணையாக ரூ.25,000/-ம், அவருக்கு கீழ் பணிபுரியும் மேற்பார்வையாளர் திரு.ஆர்.மணிகண்டன் அவர்கள் ரூ.3,00,000/- தனக்கு கையூட்டாக கேட்டு அதில் முதல் தவணையாக ரூ.50,000/- கேட்டதாகவும் புகார் அளித்தார். புகாரின் பேரில் 28.12.2018 ஆம் தேதி பொறி வைத்து பிடிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளபட்டு துணை இயக்குநர் திருமதி.ஜி.வசந்தி, மேற்பார்வையாளர் திரு.ஆர்.மணிகண்டன், இதற்கு இடைத்தரகராக செயல்பட்ட திரு.எ.ஹரிக்குமார் மற்றும் திரு.எம்.வடிவேல் ஆகியோர்களை கையும் களவுமாக பிடித்து இடைத்தரகர்களிடமிருந்து கையூட்டு பணம் ரூ.50,000/- மற்றும் 25,000/- கைப்பற்றப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த வழக்கு தொடர்பாக மேற்கண்ட நான்கு நபர்களும் கைது செய்யப்பட்டு நீதி மன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.